விரும்புகிறேன். அடுத்து, மின்வெட்டைக் காரணமாக வைத்து தான் இந்த 'லாக்-அவுட்' செய்யப்பட்டிருக்கிறதா என்பதை யும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி மின்வெட்டல்ல இந்தக் கதவடைப்பிற்குக் காரணம். இங்கே தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் நடந்த பேச்சுவார்த் தையில் உடன்பாடு ஏற்படாத காரணத்தால்தான் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தினரின் கோரிக்கையெல்லாம், நாங்கள் ஆலையைத் திறப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் 'ஒர்க் டு ரூல்'—அதாவது சட்டப்படிதான் நாங்கள் வேலை செய்வோம் என்ற நிலையிருக்கிறது. அது மாறி சகஜநிலைக்குத் தொழிலாளர்கள் வந்து விடுவார்களானால் நாங்கள் ஆலையைத் திறப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். தொழிலாளர்கள் 'ஸ்டார்ட்டிங் பாயிண்ட்' என்ற அடிப்படையில் ஒரு கணிசமான தொகையை முதலில் வழங்கினால்தான் பேச்சுவார்த்தை தொடங்கு வதற்கும், சகஜநிலை உருவாவதற்கும் வாய்ப்பாக இருக்கு மென்று சொல்கிறார்கள். எனவே தொழிலாளர் தரப்பிலும் நிர்வாகத் தரப்பிலும் தங்கள் நிலையிலே அவர்கள் நின்று கொண்டு இருக்கிற காரணத்தால், இணக்கமான முடிவை உடன் மேற்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், விரைவில் ஒரு நல்ல முடிவு நிச்சயமாக எடுக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் குடிநீர் கிடைக்காதது குறித்து.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் கடந்த 10 நாட்களாகக் குடிநீர் வழங்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி] [1989 மே 11

அறிக்கை.

திருப்பத்தூர் நகராட்சிக்கான குடிநீர்த் திட்டத்திற்கு பாலாற்றின் கரையிலுள்ள அம்பலூர் என்ற கிராமத்தில் தலைமை நீரேற்று நிலையம் உள்ளது. அங்கு ஊற்றுக் கிணறுகளும் உறிஞ்சுமுறை ஊற்றுக் குழாய்கள் (Filter Points) அமைத்து வெற்றிடம் உண்டாக்கும் (Vacuum Pump) இயந்திரம் மூலம் நீர் உறிஞ்சப்பட்டு 135 குதிரை சக்தி கொண்டதும், நிமிடத்துக்கு சுமார் 4,930 லிட்டர் வீதம், நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தினசரி 16 மணி நேரம் இயங்கக் கூடிய வகையில், வாணியம்பாடி உபமின் நிலையத்தில் (Sub-Station) இருந்து தடையின்றி மின்சாரம் கிடைக்கக் கூடிய முறையில் அமைக்கப்பட்டு, 1979 முதல் செயலாக்கப்படுகிறது.

2. வழியோரக் கிராமங்களான அம்பலூர், கேதாண்டப்பட்டி பக்கிரி-தக்கா, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள ஆசிரியர் காலனிகளுக்கும் இத்திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 24 மணி நேரமும் நீரேற்றப்பட்டு திருப்பத்தூர் நகராட்சிக்கு 52,00,000 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

3. அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் தற்சமயம் 4 மீட்டர் ஆழம் தண்ணீர் உள்ளது. ஆயினும் வாணியம்பாடி மின் உப நிலையத்திலிருந்து பெறப்படும் மின் அழுத்தக் குறைவு, மின்தடை காரணமாக குடிநீர் ஏற்றுவதில் தாமதம் ஏற்பட்டு குடிநீர் வழங்குவது பாதிக்கப்பட்டது. மின்வெட்டு நேரம் நகராட்சிக்கு முன்னரே தெரிவிக்கப்படாததால், 11–4–89 அன்று பகுதிவாரியாக குறைந்த அளவே குடிநீர் தரப்பட்டது. இது பற்றி முன் அறிவிப்பு பொதுமக்களுக்குத்தர இயலவில்லை. ஏப்ரல்மாதம் 11ஆம் தேதியிலிருந்து 15ஆம் தேதிவரை மின் பற்றாக்குறை காரணமாக குறைந்த அளவில் நீர் ஏற்றப்பட்டதால் திருப்பத்தூரில் வழங்கப்பட்ட குடிநீரின் அளவு குறைவாக இருந்தது. தற்போது நாளொன்றுக்கு 45 லட்சம் லிட்டர் நீர் இறைக்கப் பெற்று திருப்பத்தூர் நகராட்சிக்கு 25 லட்சம் லிட்டர் நீரும், மற்றைய இடங்களுக்கு 20 லட்சம் லிட்டர் நீரும் தினமும் வழங்கப்படுகிறது.

4. மேலும், குடிநீர் தினந்தோறும் வழங்கப்படுவதுடன் மேடான பகுதிகளுக்கு டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் 10 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி துவக்கப்பட்டுள்ளன.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே, அங்கே பாலாற்றிலே ஏறக்குறைய 4 மீட்டர் ஆழம் தண்ணீர் உள்ளதாகவும், மின்சாரம் இல்லாத

காரணத்தால் தண்ணீர் கொடுக்கப்படவில்லை என்பதை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால், உடனடியாக குடிநீர் இல்லாத பகுதிகளுக்கு, வாணியம்பாடியிலிருந்து வருகிற மின்சாரத்தை வழங்கி இதற்கு முன்னுரிமை கொடுத்து, திருப்பத்தூர் நகரத்திற்குக் குடிதண்ணீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமை ஏப்ரல் 11 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை இருந்து வந்தது. இப்போது அங்கே நாள் ஒன்றுக்கு 45 லட்சம் லிட்டர் நீர் இறைக்கப் பட்டு, திருப்பத்தூர் நகரத்திற்கு 25 லட்சம் லிட்டர் நீரும் மற்ற இடங்களுக்கு 20 லட்சம் லிட்டர் நீரும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற இடங்களில், அந்த நகராட்சிகள் விரும்பும் என்று சொன்னால், உள்ளாட்சித் துறையினுடைய அனுமதியோடு மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நாட்களில் ஜெனரேட்டர் வைத்துக்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்படுகிறது. ஆகவே மின்சார நிலை இப்போது ஓரளவிற்கு சீர்படுத்தப்பட்டு வருகிற காரணத்தால், இதுபோன்ற பிரச்சினைகள் இனிமேல் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடிதண்ணீர் வழங்கப்படுவதாகச் சொன்னாலும், குறிப்பாக பக்கிரி தக்கா போன்ற இடங்களில் முஸ்லீம்கள் வாழ்கின்ற பகுதிகளில் தண்ணீர் கொடுக்காமல் நிறுத்திவைக்கப்பட்டு உள்ளது. எனவே திருப்பத்தூர் நகரத்தில் இதுபோன்ற பல இடங்களில் தண்ணீர் வருவதில்லை. உடனடியாக ஜென ரேட்டர் வாங்கி வைத்துக்கொள்ள அனுமதி வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இதுபற்றி அந்த நகராட்சி அனுப்பி யிருக்கும் என்று சொன்னால், அந்தத்துறை அதற்கான அனு மதியை வழங்கி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

6. அறிக்கை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு சா. பீட்டர் ஆல்போன்ஸ் சார்பில் திரு எம். அப்துல் லத்தீப் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பார்.